# தீர்க்கதரிசனமும் வேதவாக்கியங்களும்

**மனன வசனம்**

**அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும், நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும். 2பேதுரு 1:19.**

**ஆராய்ச்சிக்கு**

**ஏசா 53:1-12;**

**தானி 7:13,14;**

**2பேதுரு 1:16-20;**

**மத்தேயு 17:1-6;**

**2தீமோ 3:15-17.**

மே 27 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

பேதுருவின் நிருபங்களை நாம் தொடர்ந்து ஆராயும்போது, ஒரு விஷயம்மாத்திரம் மிகத் தெளிவாகத் தெரிகிறது. அதாவது, தான் எழுதுபவற்றைக்குறித்து பேதுரு முழு நிச்சயமும் நம்பிக்கையும் உடையவராக இருந்தார். பவுலும்கூட அப்படிதான். இயேசு கிறிஸ்துவையும் அவருடைய சிலுவையையும்பற்றி அறிவிப்பதில் தெளிவாகவும் உறுதியாகவும் இவர்கள் இருக்கிறார்கள்.

இந்த வார ஆராய்ச்சி வசனங்களில், பேதுருவின் இந்த நிச்சயம்பற்றி நாம் அதிகமாகவே பார்க்கமுடிகிறது. தங்கள் காலத்தில், அஞ்ஞான மார்க்கத்தாரோடு சமரசமானவர்களைப்போல, 'நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றவில்லை' என்கிறார். 2பேதுரு 1:16. மாறாக, இரண்டு காரணங்களை முன்னிட்டு தன்னுயை நம்பிக்கையில் பேதுரு உறுதியாக இருந்தார்.

முதலாவது, 'நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை' கண்ணாரக்கண்ட ஒரு சாட்சி. இரண்டாவது, 'உறுதியான தீர்க்கதரிசன வசனம்.' 2பேதுரு 1:19. இது மிகவும் முக்கியமானது. ஏனெனில், இயேசுவைக் கண்ணாரக் கண்டு சாட்சிபகருவது எல்லாருக்கும் சாத்தியமானது அல்ல. பேதுரு மீண்டும் வேதாகமத்திற்கே திரும்புகிறார்; இயேசுவைப்பற்றி நிச்சயமாகக் கூற வேதவாக்கியங்களை, குறிப்பாக அவரைப்பற்றிக் கூறும் தீர்க்கதரிசனப் பகுதிகளைச் சுட்டிக்காட்டுகிறார். அதே பகுதிகள் சிலவற்றை இயேசுதாமே சுட்டிக்காட்டியிருக்கிறார். மத் 26:54; லூக் 24:27. இயேசுவும் பேதுருவும் வேதாகமத்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருப்பார்களானால், நாம் முக்கியத்துவம் கொடுக்காமல் இருக்கலாமா?

2017, ஜூன் 3 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

தன் நிருபங்கள்முழுவதிலும் நிச்சயமான ஓர் உணர்வுடனே பேதுரு எழுதுகிறார். தான் முன்வைக்கிறவர் யாரென அவர் அறிந்திருந்ததால், சொல்லவேண்டியதை உறுதியாகச் சொல்கிறார். அதற்கு ஒரு காரணம், பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் சுட்டிக்காட்டினவர் இயேசுதாம் என்பதை அவர் அறிந்திருந்தது. எழுதப்பட்ட வார்த்தையில் பேதுருவுக்கு இருந்த நம்பிக்கைதான் 'மாம்சமான' வார்த்தையை அவர் அறிந்துகொள்ள உதவியது.

வேதாகமத்தையும் முற்காலத் தீர்க்கதரிசிகளையும் இயேசுவைப்பற்றி அவர்கள் சொல்வதையும் கவனியுங்கள் என்று 1பேதுரு 1:10-12ல் பேதுரு சுட்டிகாட்டுகிறார். இயேசுவைக்குறித்த இரண்டு முக்கிய விஷயங்களை பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தியிருப்பதாக பேதுரு கூறுகிறார். ஒன்று, கிறிஸ்துவின் பாடுகள்; மற்றொன்று, அவைகளுக்குப் பின்வரும் மகிமைகள். 1பேதுரு 1:11.

***இயேசுவைப்பற்றி பழைய ஏற்பாடு முன்னறிவித்த என்ன விஷயங்கள் சங் 22; ஏசா 53:1-12; சக 12:10; 13:7; எரே 33:14,15; தானி 7:13,14 ஆகிய வசனங்களில் காணப்படுகின்றன?***

தன்னுடைய விசுவாசிகள் இரட்சிப்பின் வரலாற்றில் ஒரு விசேஷித்த சிலாக்கியத்தைப் பெற்றிருப்பதை 1பேதுரு 1:10-12ல் பேதுரு தெரிவிக்கிறார். முற்காலத் தீர்க்கதரிசிகளைவிட இவர்களுக்கு அதிகம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. தங்களுடைய காலக்கட்டங்களை மனதில்வைத்துதான் தீர்க்கதரிசிகள் பேசினார்கள்; ஆனால், அவர்கள் சொன்ன செய்திகளின் முக்கியக்கூறுகள் எல்லாமே கிறிஸ்துவின் வருகையில்தான் நிறைவேறயிருந்தன.

தீர்க்கதரிசிகள் முன்னறிவித்திருந்தவற்றில் சில, பேதுரு கால விசுவாசிகள் வாழ்ந்த சமயத்தில்தான் நிறைவேறின. 'பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்தஆவியினாலே தங்களுக்குச் சுவிசேஷத்தைப்' பிரசங்கித்தவர்களிடமிருந்து அவர்கள் செய்தியை அறிந்தார்கள்; அதைப்பற்றி அறிய தேவதூதர்களும்கூட ஆவலாக இருந்தார்கள். 1பேதுரு 1:12. சுவிசேஷம் தங்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டதைக் கேட்ட அந்த விசுவாசிகள், மீட்பரின் பாடுகளையும் நிந்தைகளையும்பற்றி முற்கால தீர்க்கதரிசிகளையும்விட அதிக விலாவாரியாக அறிந்திருந்தார்கள். ஆனாலும், 'பின்வரும் மகிமைகளைப்' பெற அவர்கள் காத்திருக்கவேண்டும்; நாமும்கூட காத்திருந்துதான் ஆகவேண்டும். 1பேதுரு 1:11. அந்தத் தீர்க்கதரிசனங்களின் முதற்பகுதி நிறைவேறி விட்டதால், கடைசிப் பகுதியும் நிறைவேறும் என நாம் உறுதியாக நம்பலாம்.

வேதாகமத்தின் என்ன வாக்குறுதிகள் உங்களுடைய வாழ்க்கையில் நிறைவேறியிருக்கின்றன? என்ன வாக்குறுதிகள் நிறைவேறக் காத்திருக்கிறீர்கள்? எவ்வளவுக்கு அவற்றை எதிர்பார்த்திருக்கிறீர்கள்? என்னவானாலும், அந்த வாக்குறுதிகளை உறுதியாகப் பற்றிக்கொள்ள நீங்கள் என்ன செய்யலாம்?

## மகத்துவத்தைக் கண்ணாரக் கண்ட சாட்சிகள்

***இயேசுவில் தனக்கிருக்கும் விசுவாசத்திற்கு வேறு என்ன ஆதாரத்தை 2பேதுரு 1:16-18ல் பேதுரு தருகிறார்?***

---

தீர்க்கதரிசன வார்த்தையை ஆதாரமாகக் கூறியவர், தான் பிரசங்கித்த செய்திக்கு, தானே ஒரு சாட்சியாக இருப்பதாக இப்போது கூறுகிறார். 'தந்திரமான கட்டுக்கதைகளை' அடிப்படையாகக் கொண்டு அமைந்ததல்ல கிறிஸ்தவ மார்க்கம். 2பேதுரு 1:16. மாறாக, வரலாற்றில் நிகழ்ந்த நிஜநிகழ்வுகளின் அடிப்படையில் அமைந்தது; அந்த நிகழ்வுகளை அவர்தாமே கண்ணாரக் கண்டிருந்தார்.

இயேசுவின் ஊழியத்திலும் வாழ்விலும் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகளில் எல்லாம் பேதுரு கூடவே இருந்ததை நற்செய்திப் புத்தகங்களில் வாசிக்கிறோம். இயேசுவின் பிரசங்கங்கள், போதனைகள், அற்புதங்களின்போது அவர் கூட இருந்தார். வலைநிறைய மீன்பிடித்த ஆரம்ப அற்புதத்திலிருந்து இயேசு உயிர்த்தெழுந்த பிறகு கலிலேயாவில் இயேசுவைக் கண்டது வரைக்கும் நிகழ்ந்த நிகழ்வுகளை எல்லாம் பேதுரு கண்ணாரக் கண்டிருந்தார். லூக் 5:4-6; யோவான் 21:15.

***தான் கண்ணாரக் கண்டதைச் சொல்வதற்கு பேதுரு எந்த நிகழ்வை குறிப்பிட்டுச் சொல்கிறார்? 2பேதுரு 1:17,18. அந்த நிகழ்வின் தனிச்சிறப்பு என்ன?***

இயேசு மறுரூபமான சம்பவத்தை தான் கண்ணாரக் கண்டதாக பேதுரு விசேஷமாக வலியுறுத்துகிறார். பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் கூட்டிக்கொண்டு, ஜெபம்பண்ணும்படி இயேசு ஒரு மலையின்மேல் ஏறினார். லூக் 9:28. அங்கே அவர்களோடு இருந்தபோது, அவர்களுடைய கண்களுக்கு முன்பாக மறுரூபமானார். அவர் முகம் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல் வெண்மையாயிற்று. மத் 17:2; லூக் 9:29. மோசேயும், எலியாவும் அங்கே அவரோடு காணப்பட்டார்கள்; 'இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்' என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் பிறந்தது. மத் 17:5.

இயேசுவோடு இருந்தபோது பேதுரு எவ்வளவோ கண்டிருக்கிறார்; அவற்றில் இந்தச் சம்பவம் மிகமுக்கியமானது. இயேசு தேவனுடைய குமாரனென்றும், தேவ திட்டப்படியே அவர் தம் வாழ்வை பூமியில் வாழ்ந்தார் என்றும், பிதாவோடு ஒரு விசேஷித்த உறவை வைத்திருந்தார் என்றும் அது வெளிப்படுத்துகிறது. பேதுரு எவ்வளவுதான் பார்த்திருந்தாலும், பார்க்கவிரும்பியிருந்தாலும், 'வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தை' தான் கேட்ட இந்த நிகழ்வைதான் தன் நிருபத்தில் அவர் குறிப்பிட்டு எழுதுகிறார். 2பேதுரு 1:18.

---

உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையிலும் விசுவாசத்திலும் ஆழமான, நீடித்த தாக்கத்தை உண்டாக்கிய நிகழ்ச்சிகள் என்ன? என்ன தாக்கத்தை அவை உண்டாக்கின? அத்தாக்கம் இன்றும் உங்களில் காணப்படுகிறதா? அந்தத் தாக்கத்திற்கான காரணம் என்ன? ஓய்வுநாள் வகுப்பில் உங்கள் பதில்களைக் கலந்தாலோசியுங்கள்.

## நம் இருதயங்களில் உதிக்கும் விடிவெள்ளி

*'அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும், நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்.' 2பேதுரு 1:19.*

***மேலுள்ள வசனத்தை கவனமாக வாசியுங்கள். இங்கு நமக்கு என்ன மிகமுக்கியமான கருத்தை பேதுரு சொல்கிறார்?***

வேதாகமத்தின் மற்ற இடங்களை போலவே இங்கும் இருளும் வெளிச்சமும் வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன. 'இருளுள்ள' இடத்தில் உதிக்கும் ஒரு வெளிச்சம்போல தேவ வார்த்தை இருக்கிறதென பேதுரு கூறுகிறார். 'இருள்' என்பதை சிலர் 'அழுக்கு', 'அசுத்தம்' என்றும் மொழிபெயர்த்திருக்கிறார்கள். அதனால் தான், அந்த வெளிச்சத்தை நாம் 'கவனித்திருப்பதும்' 'பொழுது விடிந்து விடிவெள்ளி நம் இருதயங்களில் உதிக்குமளவும்' அதைப் பின்பற்றுவதும் அவசியமென உறுதியாகக் கூறுகிறார். நாம் விழுந்துபோனவர்கள்; தொலைந்த, அந்தகாரமான உலகில் வாழ்கிறோம். இந்த அந்தகாரத்திலிருந்து நம்மை வெளிச்சத்திற்கு வழிநடத்திச் செல்வதற்கு தேவனுடைய தெய்வீக வல்லமை நமக்கு அவசியமாக இருக்கிறது; இயேசுவே அந்த வெளிச்சம்.

தனது உடன்விசுவாசிகளுக்கு பேதுரு ஓர் இலக்கைச் சுட்டிக்காட்டுகிறார். 'பொழுதுவிடிந்து' என்பது இயேசுவின் இரண்டாம் வருகையைச் சுட்டிக்காட்டுவதாக சிலர் நம்புகிறார்கள். நாமும் இரண்டாம் வருகையையே எதிர்நோக்கி இருக்கிறோம்; ஆனாலும், 'விடிவெள்ளி' உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் என்று சொல்லப்படுவதால் அது தனிப்பட்ட ஓர் அனுபவமெனப் புரிகிறது. 'விடிவெள்ளி' என்பது இயேசுவைச் சுட்டிக்காட்டுகிறது. வெளி 2:28. இயேசுவை அறிவதும், அவரை முற்றிலும்பற்றிக்கொள்வதும், ஜீவனுள்ள கிறிஸ்துவை மெய்யாகவே தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் அனுபவிப்பதும்தான் மக்களுடைய இருதயங்களில் அவர் உதிப்பதாகும். இயேசுவை ஒரு கோட்பாடாக அறிந்திருப்பது மாத்திரம் போதாது; நம் வாழ்க்கையின் மையமாகவும், நம் விசுவாசத்தின் ஆதாரமாகவும் அவர் இருக்கவேண்டும். அதனால்தான், தேவ வார்த்தையை ஆராய்வதற்கும், 'விடிவெள்ளியாகிய' இயேசுவோடு உறவுவைத்திருப்பதற்கும் தொடர்பு இருப்பதை பேதுரு கூறுகிறார்.

வெளிச்சம் நமக்குள் உதித்தால், அதை மற்றவர்களுக்கும் வீசச்செய்வோம். 'தேவ சத்தியத்தின் மகிமையால் பூமி முழுவதும் பிரகாசமடைய வேண்டும். சகல தேசங்களுக்கும் சகல மக்களுக்கும் வெளிச்சம் பிரகாசிக்கவேண்டும். அந்த வெளிச்சத்தைப் பெற்றவர்களிடமிருந்துதான் அது பிரகாசிக்கவேண்டும். விடிவெள்ளி நம்மேல் உதித்திருக்கிறார்; அவருடைய வெளிச்சத்தை இருளில் இருப்போரின் பாதைகளில் நாம் வீசச்செய்யவேண்டும்.' – *EGW, Christian Experience and Teachings of Ellen G. White, p. 220.*

---

இயேசுவை நீங்கள் சிறப்பாக அறிந்துகொள்வதற்கு, வேதாகம ஆராய்ச்சி எவ்வாறு உதவுகிறது?

***2பேதுரு 1:19-21 வசனங்களை வாசியுங்கள். எந்தத் தீர்க்கதரிசனங்களை பேதுரு குறிப்பிடு கிறார்? வேதாகமத்தின் எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதல்ல என்று அவர் சொல்வதின் அர்த்தம் என்ன?***

கிறிஸ்தவமார்க்கமானது தந்திரமான கட்டுக்கதைகளை (2பேதுரு 1:16) அடிப் படையாகக் கொண்டு உருவானதல்ல என்பதை வலியுறுத்துவதற்கு இரண்டு ஆதா ரங்களை பேதுரு முன்வைக்கிறார்: முதலாவது, கண்ணாரக்கண்ட சாட்சிகள். 2பேதுரு 1:16-18. இரண்டாவது, வேதத் தீர்க்கதரிசனங்கள். 2பேதுரு 1:19-21. இதைத்தான் முன்னரும் அவர் கூறினார். 1பேதுரு 1:10-12.

'வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடைய தல்ல' என்று பேதுரு கூறுகிறார். 2பேதுரு 1:20. இப்படிச் சொல்வதால், வேதாக மத்தை நாம் வாசிக்கவேண்டியதில்லையென அவர் கூறவில்லை. 1பேதுரு 1:13ல் 'உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொள்ளுங்கள்' அல்லது 'உங்கள் மனம் செய லாற்றத் தயாராயிருக்கட்டும்' என்று சொல்கிறவர் எப்படி வேதாகமத்தை வாசிக்க வேண்டாமென்பார்? அதுமட்டுமா! தங்களுக்குக் கொடுக்கப்பட்ட தீர்க்கதரிசனங் களின் பொருள் என்னவென்று முற்கால தீர்க்கதரிசிகள் கருத்தோடு ஆராய்ந்து பார்த்ததாகவும் அவர் கூறியிருக்கிறார். 1பேதுரு 1:10.

அப்படியானால் பேதுரு சொல்வதின் அர்த்தம் என்ன? புதிய ஏற்பாட்டு சபை யினர் ஒன்றுசேர்ந்து வளர்ந்தார்கள்; ஒன்றுசேர்ந்து ஆராய்ந்தார்கள். ஒரு பெரிய குடும்பத்தின் ஒரு பகுதியாக கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். 1கொரி 12:12-14. எனவே, விசுவாசக்கூட்டத்தாரின் கருத்தைப் புறக்கணிக்கிற ஓர் ஆராய்ச்சியில் ஈடுபடக்கூடாது என்பதை பேதுரு இங்கு எச்சரிக்கிறார். மற்றவர்களோடு சேர்ந்து செயல்படும்போதுதான் ஒரு கூட்டமாக நாம் வளரமுடியும். அந்தச் சமுதாயத் தோடும், அதிலுள்ள தனிநபர்களோடும் ஆவியானவர் கிரியைசெய்கிறார். அவர வர் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டு, தெளிவாக்கி, உறுதிப்படுத்தலாம். மற்றவர்களின் கருத்தைப் புறக்கணித்து, தனியாகச் செயல்படுகிறவர் தவறான புரிந்தகொள்ளுதல்களுக்கு வர வாய்ப்பிருக்கிறது; குறிப்பாக, தீர்க்கதரிசனங் களை தவறாகப் புரிந்துகொள்ள வாய்ப்பிருக்கிறது.

இந்தக் கருத்தைச் சொல்வதற்கு ஒரு நல்ல காரணத்தை அடுத்த வசனங்களில் பேதுரு கூறுகிறார். கள்ளத்தீர்க்கதரிசிகளும் கள்ளப்போதகர்களும் பரவியிருந்த கிறிஸ்தவக் கூட்டத்தாருக்கு அவர் எழுதுகிறார். 2பேதுரு 2:1. அவர்களுடைய வேதாகம விளக்கங்களை முழுச்சபையின் பகுத்தாய்வுக்குச் சமர்ப்பிக்குமாறு பேதுரு வலியுறுத்துகிறார். ஆவியால் வழிநடத்தப்படும் விசுவாசக்கூட்டத்தாரின் ஆலோசனைக்குச் செவிகொடுக்க மறுத்ததால், எத்தனை பேர் மதவெறிக்குள்ளும் தவறுக்குள்ளும் இழுக்கப்பட்டிருக்கிறார்கள்? அன்று அது எவ்வளவுக்கு ஆபத் தாக இருந்ததோ, அந்த அளவுக்கு இன்றும் ஆபத்தாக இருக்கிறது.

சபையின் ஆலோசனைக்கும் அறிவுரைக்கும் எப்போதுமே திறந்த மனதுடன் செவிசாய்ப்பது ஏன் முக்கியம்? அதேசமயம், மற்றவர்களுக்கு அடிபணிந்துசெல்வதில் நமக்குள்ள வரை முறைகள் என்ன?

## நம் வாழ்க்கையில் வார்த்தை

பரிசுத்த வேதவாக்கியங்களை பேதுரு எவ்வளவுக்கு வலியுறுத்துகிறார் என்பதைப் பார்த்தோம். நம் கிறிஸ்தவ அனுபவத்தில் வேதாகமம் முக்கியப் பங்காற்றுவதையும், வேதவாக்கியங்கள் தேவ ஏவுதலால் எழுதப்பட்டதையும் வலியுறுத்திக் கூறுபவையாக 2பேதுரு 1:19-21 வசனங்கள் உள்ளன. மற்றப் புத்தகங்களை போல, மனித வியூகத்தால், மனித சித்தத்தால் எழுதப்பட்ட ஒரு புத்தகம் அல்ல வேதாகமம். 'தேவனுடைய பரிசுத்த மனுஷர்களில்' பரிசுத்த ஆவியானவர் கிரியைசெய்து, அவர் வல்லமையால் எழுதப்பட்டதுதான் வேதாகமம்.

***நம்முடைய வாழ்க்கையில் வேதாகமத்தின் பங்கை அறிந்துகொள்ள 2தீமோ 3:15-17 எவ்வாறு உதவுகிறது? 2பேதுரு 1:19-21 சொல்லும் சத்தியத்தை அவை எவ்வாறு உறுதிப்படுத்துகின்றன?***

தீமோத்தேயுவுக்கும் சபைக்கும் நேரிட்டிருந்த ஆபத்துகளைப்பற்றி பவுல் எச்சரித்துவிட்டு, வேதாகமத்தின் முக்கியத்துவத்தை சுருக்கமாகக் கூறுகிறார். 'வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தத்திற்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.' 2தீமோ 3:16,17.

**மூன்று கருத்துகளைப்பற்றிப் பார்ப்போம்.**

**உபதேசம்:** சபையின் போதனைகள்தாம் உபதேசங்கள். தேவவார்த்தையில் முக்கியமாகக் கருதப்பட்டுள்ள கருத்துகள்பற்றி சபைக்குடும்பத்தினர் எத்தகைய நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் என்பதை அவை வெளிப்படுத்துகின்றன. ஒவ்வோர் உபதேசமும் கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருக்கவேண்டும். 'தேவனுடைய பரிபூரணமான' சித்தத்தின்படி வாழும்விதத்தை நாம் அறிந்துகொள்ள, அவை உதவவேண்டும். ரோமர் 12:2.

**கடிந்துகொள்ளுதல்:** வேதாகமம் 'கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தத்திற்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும்' பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது என்று தீமோத்தேயுவுக்கு பவுல் கூறுகிறார். 2தீமோ 3:16. வேதாகமத்தின் தீர்க்கதரிசனங்கள், இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்குப் போன்றது என்றுதான் பேதுருவும் கூறுகிறார். 2பேதுரு 1:19. அதாவது, நாம் எப்படி வாழவேண்டும் என்றும், எது சரி-எது தவறு என்றும் நம்மை வழிநடத்தக்கூடியதாக வேதாகமம் இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் எழுதப்பட்ட வேதாகமம், தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்துகிற ஒரு புத்தகமாக இருக்கிறது.

**'இரட்சிப்புக்கேற்ற ஞானம்':** வேதாகமம் நம்மை 'இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவர்களாக்குகிறது' என்று பவுல் குறிப்பிடும்போது, அந்த வேதாகமம் இயேசுவைச் சுட்டிக்காட்டுவதை வலியுறுத்துகிறார். 2தீமோ 3:15. இயேசு நம் பாவங்களுக்காக மரித்தார் என்கிற நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதுதான் இரட்சிப்பு.

வேதாகமம் உபதேசிக்கிறது, ஒழுக்கப்போதனையைத் தருகிறது, இரட்சிப்புக்கேற்ற ஞானத்தைக் கொடுக்கிறது; 'பொழுது விடிந்து விடிவெள்ளி இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போல்' வேதாகமம் இருப்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை.

"சத்தியம் எதுவென்று வேதாகமத்திலிருந்து அறிந்து, அந்த வெளிச்சத்தில் நடப்பதும், தன் முன்மாதிரியைப் பின்பற்ற மற்றவர்களையும் ஊக்குவிப்பதும்தான் பகுத்தறிவுள்ள ஒவ்வொரு மனிதனின் முதன்மையான, உன்னதமான கடமை. அனுதினமும் வேதாகமத்தை கருத்துடன் ஆராயவேண்டும்; வசனத்தோடு வசனத்தை ஒப்பிட்டு, ஒவ்வோர் எண்ணத்தையும் எடைபோடவேண்டும். நம்மைக்குறித்து நாம் தேவனுக்கு கணக்குக் கொடுக்கவேண்டியிருப்பதால், தேவனுடைய உதவியோடு நாம் நம் நம்பிக்கைகளில் உறுதிப்படவேண்டும்.

"வேதாகமத்தில் மிகத்தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியங்கள் அறிஞர்களால் சந்தேகத்திற்கும் தெளிவின்மைக்கும் ஆளாக்கப்பட்டுள்ளன; மிகுந்த ஞானவான்கள்போல நடிக்கும் அவர்கள், புதிரான ஆவிக்குரிய அர்த்தத்தோடு வேதாகமம் எழுதப்பட்டிருப்பதாகப் போதிக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களிடம்தான், 'நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாதவர்கள்' என்று இயேசு சொன்னார். மாற்கு 12:24. ஒரு வசனம் அடையாளமாகவோ உருவகமாகவோ இல்லாவிட்டால், உள்ளபடியே வேத வசனத்திற்கு அர்த்தம்சொல்ல வேண்டும். 'அவருடைய சித்தத்தின்படி செய்யமனதுள்ளவனெவனோ உபதேசத்தை அறிந்துகொள்ளுவான்.' யோவான் 7:17. வேதாகமத்தை உள்ளபடியே மனிதர்கள் அறிந்திருந்தால், அவர்களுடைய எண்ணங்களை கள்ளப்போதகர்கள் குழப்பி, வழிவிலக்காமல் இருந்திருந்தால், தேவ தூதர்களையும் களிப்படைவார்கள். இப்போது தவறான வழியில் திரிந்துகொண்டிருக்கும் ஆயிரமாயிரமானவர்களை கிறிஸ்துவின் மந்தைக்குள் கொண்டுவந்திருக்கும் ஒரு பணி நடைபெற்றிருக்கும்." – *EGW, GC, p 598,599.*

# கலந்துரையாடக் கேள்விகள்

1. வேதாகமத்தை தெளிவாக அறிய உதவும் வேறு நியதிகள் என்ன?

2. 'வேதாகமமே தனக்கு விளக்கு' என்று மார்டின் லூதர் எழுதுகிறார். வேதாகமத்தில் ஓர் இணக்கம் காணப்படுவதையும், ஒரு பகுதி மற்ற பகுதியைப் புரிந்துகொள்ள உதவுவதையும் அதன்மூலம் குறிப்பிடுகிறார். இதற்கு சில உதாரணங்களக் கூறுங்கள்.

3. உங்கள் கிறிஸ்தவ அனுபவத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சிகளில் பொதுவாகக் காணப்பட்டது என்ன? ஒவ்வொருவரின் அனுபவத்திலிருந்தும் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

4. வேதாகமத்தை ஆராய்வதால் எவ்வாறு தேவனோடான அனுபவம் பலப்படும் என்று யாராவது கேட்டால் என்ன பதில் சொல்வீர்கள்? எழுதப்பட்ட தேவ வார்த்தையை ஆராய்ந்து ஆண்டவராகிய இயேசுவை அறிந்துகொள்வதற்கான என்ன நியதிகளை உங்கள் அனுபவத்தில் கண்டுகொண்டீர்கள்?

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,
டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெர்ட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)
## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.